## October 6, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பிரதிநிதிகள் இடையே எகிப்தில் திங்கள்கிழமை (அக். 6) பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.
   i. அமெரிக்க வெள்ளை மாளிகையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்குப்பின் காஸாவில் போர்நிறுத் தத்தை மேற்கொள்ள அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் 20 அம்ச திட்டத்தை முன்மொழிந்தார்.
   ii. அந்தத் திட்டத்தின் சில அம்சங்களை ஏற்றுக்கொண்ட ஹமாஸ், இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவிக்க ஒப்புக் கொண்டது. இதையடுத்து, காஸாவில் நடத்தும் தாக்குதலை நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு டிரம்ப் உத்தரவிட்டார்.
   iii. இதைத் தொடர்ந்து, தங்களால் கைது செய்யப்பட்டுள்ள பாலஸ்தீனர்கள் மற்றும் காஸா மக்களை விடுவிக்க இஸ்ரேலும் ஒப்புக்கொண்டு அதன் முதல் கட்டத்தைச் செயல்படுத்த தயாராகி வருவதாக தெரிவித்தது.
   iv. இந்நிலையில், இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் பிரதிநிதிகள் இடையேயான பேச்சுவார்த்தை எகிப்து நாட்டில் திங்கள்கிழமை நடைபெறுகிறது. இதில் அமெரிக்க பிரதிநிதியாகஸ்டீவ் விட்காஃப் பங்கேற்பார் என எகிப்து அதிகாரிகள் தெரிவித்தனர்.
   v. காஸாவில் 2023, அக். 7- ஆம் தேதி போர் தொடங்கி இரண்டு ஆண்டுகளை நெருங்கி வரும் நிலையில், இந்தப் பேச்சு வார்த்தை முக்கியத்துவம் பெற்றுள்ளது.
2. பிகார் சட்டப்பேரவைத் தேர்தலில் 17 புதிய நடைமு றைகளை தேர்தல் ஆணையம் அறி முகப்படுத்தவுள்ளதாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தெரிவித்தார்.
   i. பிகார் மாநிலத்தில் பேரவைத் தேர்தலை சுமுகமாக நடத்தி முடிப்பதற்காக வாக்குப் பதிவு மற்றும் வாக்குகள் எண்ணப்படும் பணியின்போது 17 புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.
   ii. குறிப்பாக, வட்ட அளவிலான அலுவலர்கள் (பிஎல்ஓ), பிஎல்ஓ கண்காணிப்பாளர்கள், வாக்குப் பதிவு மற்றும் வாக்குகள் எண்ணும் பணியில் ஈடுபடும் ஊழியர்கள், தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் மத்திய ஆயுத காவல் படையினர், தேர்தல் கண்காணிப்புக் குழு, தேர்தல் பார்வையாளர்கள் ஆகியோருக்கான ஊதியம் இரட்டிப் பாக்கப்பட்டுள்ளது.
   iii. தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (இஆர்ஓ) மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (ஏஇ.ஆர்ஓ) ஆகியோருக்கு முதல்முறையாக மதிப்பூதியம் வழங்கப்பட உள்ளது.
   iv. தேர்தல் பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு சிற்றுண்டி வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
   v. வாக்காளர்கள் தங்களின் கைப்பேசிகளை பாதுகாப்பாக வைக்க வாக்குச்சாவடிக்கு வெளியே பிரத்யேக மையம் அமைக்கப்படும்.
   vi. வாக்காளர்கள் வாக்கைப் பதிவு செய்ய நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலையைத் தவிர்க்கும் வகையில், அடுக்குமாடி கட்டடங்கள் மற்றும் சமூக குடியிருப்புப் பகுதிகளில் கூடுதல் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன.
   vii. வாக்காளர்களுக்கு அதிகாரபூர்வ மற்ற அடையாளச் சீட்டுகளை விநியோகிக்கும் மையங்களை வாக்குச் சாவடியிலிருந்து 100 மீட்டருக்கு அப்பால் அமைத்துக்கொள்ள கட்சி வேட்பாளர்களுக்கு அனுமதி அளிக்கப்படும்.
   viii. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முதல்முறையாக வேட்பாளரின்

வண்ணப் புகைப்படம் இடம்பெற உள்ளது.

ix. வாக்குப் பதிவு இயந்திரத்தில் வேட்பாளர்களின் பெயர்கள் வாக்காளர்கள் சிரமமின்றி படிக்கக்கூடிய வகையில் அமைக்கப்படும்.

x. தேர்தல் நாளில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் 100 சதவீத இணைய ஒளிபரப்பு மேற்கொள்ளப்படும்.

xi. அடையாள புதிய வாக்காளர்களுக்கு அவர்கள் பதிவு செய்த 15 நாள்களுக்குள் வாக்காளர் அட்டையை வழங்குவதற்கான புதிய வழிகாட்டு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

xii. பிகார் தேர்தலில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்தப் புதிய நடைமுறைகள், அடுத்தடுத்து நடைபெறவுள்ள பிற மாநில தேர்தல்களின் போதும் நடைமுறைப்படுத்தப்படும்.

3. இரு தரப்பு உறவுகளை மேம்படுத்தும் விதமாக பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் மலேசியாவுக்கு மூன்று நாள்கள் பயணத்தை தொடங்கினார்.

   i. மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் அழைப்பின்பேரில் பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப் அக். 7-ஆம் தேதி வரை மலேசியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

   ii. இந்தப் பயணத்தின்போது, மலேசிய பிரதமருடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தும் ஷாபாஸ் ஷெரீஃப், முக்கிய பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்துகிறார்.

4. போடோலாந்து பிராந்திய கவுன்சிலின் (பிடிசி) தலைமைச் செயல் உறுப்பினராக போடோலாந்து மக்கள் முன்னணி (பிபிஎஃப்) தலைவர் ஹக்ராம மொஹிலாரி பதவியேற்றார்.

   i. அஸ்ஸாம் மாநிலத்தின் கோக்ராஜார், சிராங், பக்ஸா, உதல்குரி, தமுல்பூர் ஆகிய 5 மாவட்டங்களை உள்ளடக்கிய போடோலாந்து பிராந்தியத்தை தன்னாட்சி அமைப்பான போடோலாந்து பிராந்திய கவுன்சில் நிர்வகிக்கிறது.

   ii. மொத்தம் 40 உறுப்பினர்களைக் கொண்ட இந்த கவுன்சிலுக்கான தேர்தல் கடந்த செப்.22-ஆம் தேதி நடைபெற்றது. மத்திய அரசுடன் கடந்த 2020-இல் மேற்கொள்ளப்பட்ட புதிய போடோ ஒப்பந்தத்துக்குப் பிறகு நடைபெற்ற இரண்டாவது தேர்தலில், 28 இடங்களில் போடோலாந்து மக்கள் முன்னணி (பிபிஎஃப்) வெற்றி பெற்றது.

5. இந்தியப் பெருங்கடலில் இந்தியா மற்றும் பிரிட்டன் நாடுகளின் கடற்படைகள் எட்டு நாள் கூட்டுப் பயிற்சியை தொடங்கின.

   i. பிரிட்டனின் ஹெச்எம்எஸ் பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் விமானம்தாங்கிக் கப்பல் தலைமையில் அந்நாட்டுக் கப்பல்கள் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. 'எக்சர்சைஸ் கொங்கண்' என்று இந்தப் பயிற்சிக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

   ii. இந்தியா மற்றும் பிரிட்டனின் கடற்படைகள் இந்த கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவது பாதுகாப்பான, சுதந்திரமான கடல்வழிகளை உறுதிப்படுத்த இரு நாடுகளும் உறுதி பூண்டிருப்பதை எடுத்துக்காட்டுவதாக இந்தியக் கடற்படை தெரிவித்துள்ளது.

   iii. கடலில் இந்தியா மற்றும் பிரிட்டன் கடற்படைகளின் கடல் சார்ந்த மற்றும் வான்வழித் திறன்களை மேம்படுத்துவதே இந்த கூட்டுப் பயிற்சியின் நோக்கமாகும்.

6. நாட்டில் உள்ள உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளுக்கு அதிக அளவு பற்றாக்குறை நிலவுகிறது. 25 மாநில உயர் நீதிமன்றங்களில் உள்ள 330 நீதிபதி பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அதிகபட்சமாக உத்தர பிரதேச மாநிலம் அலாகாபாத் உயர் நீதிமன்றத்தில் 76 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன. அந்த உயர்நீதிமன்றத்தில்

மொத்தம் 160 நீதிபதி பணியிடங்கள் உள்ள நிலையில், 76 பணியிடங்கள் நிரப்பப்படவில்லை.

i. மத்திய நீதித்துறை மற்றும்தேசிய நீதித் துறை தரவு கட்டமைப்பின் (என்ஜே டி.ஜி) புள்ளிவிவரங்கள்படி (நிகழாண்டு செப்.1-ஆம் தேதி நிலவரப்படி), சிக்கிம் மற்றும் மேகாலய உயர்நீதிமன்றங்களில் மட்டுமே நீதிபதி பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்பட்டுள்ளன.

ii. உச்சநீதிமன்றத்தில் அனைத்து நீதிபதி பணியிடங்களும் (34) நிரப்பப்பட்டுள்ளன. ஆனால் உயர்நீதிமன்றங்களில் நீதி பதிகளுக்கு நிலவும் பற்றாக்குறை நீதி வழங்குவதை தாமதப்படுத்துகிறது. ஏற்கெனவே நீதிமன்றங்களில் பெருமளவு வழக்குகள் தேக்கமடைந்துள்ள நிலையில், நீதிபதிகளுக்கு நிலவும் பற்றாக்குறை நிலைமையை மேலும் மோசமாக்குகிறது.

iii. நாட்டில் உள்ள அனைத்து உயர்நீதி மன்றங்களிலும் மொத்தம் 1,122 நீதிபதி பணியிடங்கள் உள்ளன. ஆனால் 792 நீதிபதிகள் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். 330 நீதிபதி பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. அவற்றில் 161 நிரந் தரமற்றும் 169 கூடுதல் நீதிபதிகளுக்கான பணியிடங்களும் அடங்கும். 2 ஆண்டுகளுக்கு மேல் பதவிக்காலம் தாண்டாத வகையில், அவர்கள் நியமிக்கப்படுவர். இதுகுறித்து முன்னாள் நீதிபதிகள் மற்றும் சட்டநிபுணர்கள் கூறியதாவது: உயர்நீதிமன்றங்களில் காலிப் பணியிடங்கள் காலதாமதமின்றி உடனடியாக நிரப்பப்படாவிட்டால், நீதி பரிபாலன முறை மோசமாகப் பாதிக்கப்படுவது தொடரும். இது தேக்கமடையும் வழக்குகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

iv. நீதிபதிகளை நியமிக்கும் நடவடிக்கையை நிலுவையில் வைப்பது வழக்கு விசாரணைகள் முடிக்கப்படுவதை நேரடியாகப் பாதிக்கும். இதனால் வழக்கு தொடுப்பவர்கள்தான் பெரிதும் பாதிக்கப்படுவர். இந்தப் பிரச்னையில் நீதித்துறையும், மத்திய அரசும் மிக அவசரமாக நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால், வழக்கு விசாரணைகளில் தாமதம் ஏற்படுவது நீடிக்கும்.

v. தற்போது பணியாற்றி வரும் நீதிபதிகளுக்கு பணிச்சுமை அதிகமாக உள்ளது. இது நீதித்துறையின் திறன் மற்றும் தரத்ததைப் பாதிக்கிறது. ஒவ்வொரு உயர்நீதி மன்றத்திலும் எத்தனை வழக்குகள் நிலுவையில் உள்ளன என்பதை அடிப்படையாக கொண்டு, திட்டமிட்டு நீதிபதிகள் நியமனத்தை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தனர்.

vi. 67 லட்சம் வழக்குகள் தேக்கம்: என்ஜேடிஜி தரவுகளின்படி, நாட்டில் உள்ள உயர்நீதிமன்றங்களில் 67 லட்சத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் தேக்கமடைந்துள்ளன. உச்ச நீதிமன்றத்தில் அனைத்து நீதிபதி பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ள போதிலும், அங்கு 60,000-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

7. மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் தொழில்நுட்ப சாதனங்களுக்கு சான்றளிப்பது மற்றும் அது தொடர்புடையை பிற பணிகளை கண்காணிப்பது போன்றவற்றுக்காக இணைய உதவி தொழில்நுட்ப வலைதளத்தை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

i. மாற்றுத்திறனாளிகளுக்கென தற்போது செயல்படுத்தப்படும் சுகாதார மற்றும் சமூக நலத் திட்டங்களில் தொழில்நுட்பப் பயன்பாட்டை ஒருங்கிணைப்பது, வகைப்படுத்துவது, சான்றிதழ் வழங்குவது, எளிதாக அணுகுவது, பாதுகாப்பு போன்றவற்றுக்கு விரிவான நடைமுறைகளை உதவும் தொழில்நுட்பம்

(தரநிர்ணயம் மற்றும் அணுகல்) வரைவு விதிகள், 2025-இன்கீழ் மத்திய அரசு வகுத்துள்ளது.

8. மேற்கு வங்க மாநிலம், டார்ஜீலிங் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்த பலத்த மழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 23 பேர் உயிரிழந்தனர்.
டார்ஜீலிங்கில் சிக்கியுள்ள 1,000-க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளை மீட்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.
    i. மேற்கு வங்கத்தின் வடபகுதியில் அமைந்துள்ள பிரபல சுற்றுலாத் தலமான டார்ஜீலிங் மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. இதனால் சர்சாலி, ஜஸ்பிர் கான், மிரிக் பஸ்தி, தர்காவ்ன், நகர கட்டா மற்றும் மிரிக் ஏரி உள்ளிட்ட பகுதிகளில்
    நிலச் சரிவு ஏற்பட்டு 23 பேர் உயிரிழந்தன.
    ii. டார்ஜீலிங் மாவட்டம் மற்றும் வடக்கு சிக்கிமை இணைக்கும் சாலைகளும், சிலிகுரி-மிரிக் டார்ஜீலிங்கை இணைக்கும் இரும்புப் பாலமும் கடுமையாகச் சேதமடைந்திருப்பதாகவும், பல்வேறு பகுதிகளை வெள்ளநீர் சூழ்ந்திருப்பதாகவும் தேசிய பேரிடர் மீட்புப் படை தெரிவித்துள்ளது.